**முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 7.12.2024**

**O.S. 84/2015**

**வா.சா.1– மேரி நிர்மலா**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

என் கணவரின் வீடு அப்பட்டுவிளையில் உள்ளது. நான் திருமணத்திற்கு பின் என் கணவர் வீட்டில் அப்பட்டுவிளையில் வசித்தது உண்டா என்றால் 3 நாட்கள் மட்டும் வசித்துள்ளேன் அதன் பின் நான் சென்னை சென்று விட்டேன், என் கணவர் சென்னையில் வேலை பார்த்து வந்தார். நான் சென்னையில் பெருங்குடியில் வசித்தேன். நான் சென்னையில் சென்ட். பயஸ் டென் மெட்ரிக் கையர்செக்கன்டறி பள்ளியில் வேலை பார்த்து வந்தேன். நான் அந்த பள்ளியில் இருந்து 1997 ம் ஆண்டு ராஜினாமா செய்தேன். என் கணவர் சென்னை அசோக்நகரில் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்தார். அப்போது என் கணவருக்கு மாத சம்பளம் எவ்வளவு என நியாபகம் இல்லை. நான் அந்த பள்ளியில் மாத சம்பளம் ரூ.1200 பெற்றேன். நான் சென்னையில் வாடகை வீட்டில் குடியிருந்தேன். வாடகை எவ்வளவு என எனக்கு தெரியாது.

நான் சென்னையில் வசிக்கும் போது என் கணவருக்கும் மகனுக்கும் உடல்நிலை சரியில்லாமல் இருந்தது என்றால் சரியல்ல. சுகமாகதான் இருந்தார்கள். நான் இதே நீதிமன்றத்தில் இதே வழகக்கு பரிகாரம் கேட்டு என் அப்பாவிற்கு எதிராக அ.வ.எண்.92/2014 வழக்கு தாக்கல் செய்து இருந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் என் அப்பா பதிலுரை தாக்கல் செய்து பின்னர் சாட்சியம் அளிக்க வரவில்லை என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது அந்த வழக்கிற்கு நான் மட்டும் தான் ஆஜராகி இருந்தேன். என் அப்பா ஆஜராகவில்லை. அந்த அ.வ.எண்.92/2014 தள்ளுபடி ஆகிவிட்டது. சாட்சியிடம் ஆவணம் காட்டப்பட்டு அ.வ.எண்.92/2014 அது அந்த வழக்கில் 13.2.2015 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு என கேட்கப்பட்டது சாட்சி ஆம் என தெரிவித்தார். அது **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யபடுகிறது. அந்த பி.வா.சா.ஆ.1 தீர்ப்பில் நான் அந்த வழக்கில் ஆஜராகாததால் தள்ளுபடி செய்யபட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு சொல்லியுள்ளது ஆனால் நான் அதற்கு பொறுப்பல்ல நான் ஆஜராகி இருந்தேன்.

எனக்கு திருமணம் 3.3.1995 அன்று நடைபெற்றது. எனக்கு ஒருமகன் உண்டு. அவர் தற்போது திருவனந்தபுரத்தில் வேலை பார்க்கிறார் அவருக்கு திருமணம் ஆகவில்லை. நான் முன்னர் பெருவிளையில் உள்ள கார்ப்பஸ் கிறிஸ்டி பள்ளியில் 10 ஆண்டுகளாக வேலை பார்த்து கடந்த கல்வி ஆண்டில் அந்த பள்ளியில் இருந்து ராஜினாமா செய்து தற்சமயம் வெட்டுர்ணிமடத்தில் உள்ள பயோனியர் சி.பி.எஸ்.சி பள்ளியில் பணிபுரிந்து

வருகிறேன். நான் என் பணிக்காக வீட்டில் இருந்து பள்ளி வாகனத்தில் செல்வதில்லை ஆட்டோவில் செல்வேன். நான் சென்னையில் வசித்த சமயம் என் பெற்றோருக்கு கடிதம் எழுதும் பழக்கம் உண்டு. சாட்சியிடம் 9 கடிதங்கள் காட்டப்பட்டு சாட்சி அவர் சென்னையில் வசித்த சமயம் அவர் பெற்றோருக்கு எழுதிய கடிதங்கள் என கேட்கப்பட்டது, சாட்சி ஆம் என ஒப்புகொண்டார். அவை **பி.வா.சா.ஆ.2 (9 எண்ணம் வரிசை )** ஆக குறியீடு செய்யப்பட்டது.

எனக்கு குருசடியில் உள்ள 12 சென்ட் வீட்டு மனையை என் திருமணத்திற்கு பிறகு என் அப்பா எழுதி கொடுத்தார். புத்தேரியில் நான் வீடு வைத்து குடியிருக்கும் சொத்தை என் அப்பா எனக்கு திருமணத்திற்கு பின் எழுதி கொடுத்தார். அது 29 ஏர் அளவாகும். சந்தையடியில் உள்ள தோப்பு 15 சென்ட் பூமியையும்சேர்த்து என் அப்பா ஒரே பத்திரமாக எனக்கு எழுதி கொடுத்தார். திருமண சமயத்தில் என் அப்பா எனக்கு 60 பவுன் நகை போட்டார் ரொக்கம் எவ்வளவு என நியாபகம் இல்லை. 3 சொத்துக்களில் புத்தேரி மற்றும் குருசடி ஆகிய இரண்டு சொத்துக்களும் நாகர்கோவில் மாநகராட்சி எல்கைக்குள் வரும் சொத்துக்கள் என்றால் சரியல்ல அவை ஊராட்சியில் வரும். புத்தேரி சொத்தானது எனக்கு எழுதி கொடுத்த சமயம் வயல். அதில் நான் தற்போது வீடு வைத்து வசித்து வருகிறேன் என்றால் சரிதான். அந்த சொத்து புத்தேரி ஊராட்சியின் கீழ் வருகிறது. குருசடி சொத்து எந்த ஊராட்சியின் கீழ் வருகிறது என எனக்கு தெரியாது.

குருசடியில் உள்ள வீட்டுமனை தற்போது என் கைவசம் இல்லை விலைக்கு கொடுத்து விட்டேன் எந்த வருடம், யாருக்கு, எவ்வளவு விலைக்கு விற்றேன் என நியாபகம் இல்லை. புத்தேரி சொத்து தற்போது என் மகன் பெயரில் உள்ளது அவருக்கு நான் செட்டில்மென்ட் ஆவணம் எழுதி கொடுத்தேன் சந்தையடி சொத்து என் கணவர் பெயருக்கு செட்டில்மென்ட் ஆவணம் எழுதி கொடுத்தேன். அந்த இரண்டு செட்டில்மென்ட் ஆவணமும் இந்த வழக்கு தாக்கல் செய்தபின் எழுதி கொடுத்தேன் என்றால் ஆம். அந்த செட்டில்மென்ட் ஆவணங்களை எழுதி கொடுக்க பிரத்யேக காரணம் உண்டா என்றால் என் மகனுக்கு திருமணம் செய்ய வேண்டும் என்பதால் அவருக்கு எழுதி கொடுத்தேன். கணவருக்கு எதற்காக எழுதி கொடுத்தேன் என நியாபகம் இல்லை.

சாட்சியிடம்ஒரு ஆவணம் காட்டப்பட்டு அது குருசடி சொத்து குறித்து எழுதி கொடுத்த கிரய ஆவணமா என கேட்கப்பட்டது சாட்சி ஆம் என தெரிவித்தார். எனவே ராஜாக்கமங்கலம் பதிவலுவலக எண்.2343/2018 கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யபடுகிறது. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் குருசடி சொத்து நாகர்கோவில் மாநகராட்சி வார்டு எண்.42 ல் அமைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். குருசடி சொத்து மாநகராட்சி எல்கைக்குள் உள்ள சொத்து என எனக்கு தெரியும் என்றாலும் தெரிந்திருந்தே நான் வழக்கிற்காக தெரியாது என பொய்யாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல நான் பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை முழுவதுமாக படிக்கவில்லை. நான் என் அப்பாவிற்கு ரூ.6 லட்சம் கொடுத்தாக பிராதில் குறிப்பிட்டுள்ளது எந்த ஆண்டு , மாதம் , தேதி என்றால் தேதி மாதம் நியாபகம் இல்லை.1997 ம் ஆண்டு கொடுத்தேன். நான் சென்னையில் இருந்து வீட்டை காலி செய்து நாகர்கோவில் வந்தது 2002 ம் ஆண்டு ஆகும். நான் 2002 ம் ஆண்டு தான் பணம் கொடுத்தேனா என்றால் 1997 ம் ஆண்டே பணம் கொடுத்தேன். 24.1.1998 கடிதத்தில் நான் என் அப்பாவிற்கு டிடி எடுத்து உடனே அனுப்புங்கள் என்றும் ஒரு மாதமாக டிடி வரும் என எதிர்பார்த்தேன் என்றும் சீக்கிரம் பணம் அனுப்பி தாருங்கள் என்றும் எழுதி உள்ளேன் என்றால் சரிதான்.

1ம் பிரதிவாதி என் அண்ணன் ஆவார் 2ம் பிரதிவாதி என் தாயார் ஆவார். 1ம் பிரதிவாதியை வீட்டில் கூப்பிடும் பெயர் பாபுஜி ஆகும்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கபடுகிறது.)